# உஜ்ஜீவன் பொதுப் பங்கு வெளியீடு

சென்னை, ஏப். 25: வங்கி சாரா நிதி நிறுவனமான உஜ்ஜீவன் பைனான்ஸியல் பொதுப் பங்கு வெளியீடு வரும் ஏப். 28-ஆம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உஜ்ஜீவன் பைனான்ஸியல் பொதுப் பங்கு வெளியீட்டை மேற்கொண்டு நிதி திரட்ட உள்ளது. ஏப்.28-ஆம் தேதி தொடங்கும் இப்பொதுப் பங்கு வெளியீடு மே 2-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

ரூ.10 முகமதிப்புள்ள பங்கு ஒன்றின் குறைந்தபட்ச விலை ரூ.207-ஆகவும், அதிகபட்ச விலை ரூ.210-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏல அடிப்படையில் நிறுவனத்தின் 2.5 கோடி பங்குகள் விற்பனை செய்யப்பட உள்ளது. பங்குகள் அனைத்தும் மும்பை மற்றும் தேசிய பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த 2005-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உஜ்ஜீவன் பைனான்ஸியல் நிறுவனம் 27.7 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்துக்கு சொந்தமாக நாடு தழுவிய அளவில் உள்ள 470 கிளைகளில் 7,862 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.